<u>5வது சிறுவழக்குகள் நீதிமன்றம்</u>

<u>( மோட்டார் வாகன விபத்து வழக்குகள் தீர்ப்பாயம், சென்னை)</u>

# MCOP No. 2657/2022

| சாட்சியின் வரிசை எண் | மசாஆ 2 |
|---|---|
| பெயர் | பாலசந்திரன் |
| க/த.பெயர் | ராமகிருஷ்ணன் |
| வயது | 59 |
| விலாசம் | கிண்டி, சென்னை |
| தொழில் | டாக்டர் |

**சாட்சி அமர்வு எழுத்தரால் உறுதி மொழி சட்டம் 1969 ன் பிரிவு 6 ன் படி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அதன் படி அவரது சாட்சியம் இன்று** 02.07.2025 **ல் பதிவு செய்யப்பட்டது.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது ராயபேட்டை மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து கிடைக்கபெற்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன். எங்கள் மருத்துவமனையில் எனக்கு அளித்த அதிகார கடிதம் சாதசாஆ1. மனுதாருக்கு வலது காலில் கம்பி வைத்து அறுவை சிகிச்சை மற்றும் பிளாட்டிக் சர்ஜரி. பிளாட்டிக் சர்ஜரி செய்யும் போது நசுங்கிய பகுதியை வேறு பகுதியில் தோல் எடுத்து வந்து ஒட்டி இருக்கிறார்கள் என்றால் சரிதான். தசை இழப்பு குறித்து எந்த குறிப்பும் இல்லை. சிகிச்சைக்கு பிறகு மனுதாரரால் நடக்க முடியம். மனுதரார் தற்சமயம் வரை சிகிச்சை எடுத்து வருகிறார் என்றால் அது பற்றி எங்களுக்கு தெரியாது. மனுதாரருக்கு பின்னங்கால் நரம்பு எதும் கட் ஆகவில்லை என்றால் சரிதான். விபத்தினால் மனுதாருக்கு பின்னால் நரம்பு மற்றும் தசை சேதம் அடைந்து அவர்களால் நடக்கமுடியவில்லை என்றால் இல்லை அவரால் நடக்க முடியம்.

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் மருத்துவ வழிகாட்டி படி தான் மனுதாருக்கு இயலாமை கனித்துள்ளேன். மருத்துவ குழு கொடுத்த 30 சதவீத இயலாமையானது சரிதான்.

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவா் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.

**5வது நீதிபதி**
**சென்னை**